# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024

**(Re -accredited with " A+ " Grade by NAAC)**

முனைவர் சு. சீனிவாசராகவன், M.A., M.L.I.Sc, Ph.D.,
தேர்வு நெறியாளர் (பொ)

அலுவலகம்: **0431-2407016**
தொலைப்படி : **0431-2407444**
மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
வலைத்தளம்:**www.bdu.ac.in.**


ந.க.எண் : **M.BA., & M.C.A.**-உடனடித்தேர்வு - ஏப்ரல்-2022 (நவம்பர் -2022) நாள் : **04.11.2022**

**M.B.A., & M.C.A.** உடனடித் தேர்வு - சுற்றறிக்கை

பேறுநர்

முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக்கல்லூரிகள்

பொருள் : **M.BA., & M.C.A.** - ஏப்ரல்-2022 - உடனடி எழுத்துத் தேர்வுகள் - நடத்துவது - தொடர்பாக.

⊙⊙⊙

ஏப்ரல்-2022ல் **M.B.A., & M.C.A.** முதுநிலைப்பட்ட மேற்படிப்புத் தேர்வுகளை எழுதி. ஒரு நிலுவைத்தாள் மட்டும் உள்ள மாணவ/மாணவிகளுக்கு உடனடி எழுத்துத்தேர்வு எழுத அனுமதி அளிக்கப்படுகிறது.

விவரங்கள்

1. 2020-2022ம் கல்வியாண்டு. 2021-2022ல் இறுதியாண்டு பயின்று. ஏப்ரல்-2022ல் பல்கலைக்கழகத் தேர்வுகளை எழுதியிருத்தல் வேண்டும். முதல் பருவத்திலிருந்து நான்காம் பருவம் வரையில் உள்ள பாடங்களில் ஒரு எழுததுத்தாள் மட்டும் நிலுவைத்தாள் வைத்துள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

2. மாணவ/மாணவிகள் தேர்வு விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து அப்படிவத்தினை நிறைவு செய்து, கல்லூரி முதல்வர் பரிந்துரையுடன் **09.11.2022** (புதன் கிழமை)க்குள் இப்பல்கலைக்கழக இணையதளம் வழியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் (exams1.bdu.ac.in).

3. மீளப்பயிலுதல் (Re-doing) மற்றும் மறுச்சேர்க்கை (Re-admission) பெற்ற மாணவ/மாணவிகள் எக்காரணத்தை கொண்டும் உடனடித்தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. 2020-2022ம் கல்வியாண்டில். பல்கலைக்கழக தன்னாட்சி பெற்ற கல்லூரிகள். தொலைக்கல்வி (Distance Education) மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கையின் (Transfer Admission) மூலம் இணைவு பெற்ற கல்லூரிகளில் சேர்க்கை பெறுவதற்கு முன்பு ஏதேனும் நிலுவைத்தாள் வைத்திருப்பின், அந்நிலுவைத் தாளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

த.பி.பா.

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| உடனடித் தேர்வுக் கட்டணம் | : | 2,000.00 |
| பரிசீலனைக்கட்டணம் | : | 50.00 |
| மதிப்பெண்பட்டியல் | : | 100.00 |
| | | 2,150.00 |

உடனடித் தேர்வுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் : **09.11.2022 புதன் கிழமை**

உடனடித் தேர்வு நடைபெறும் நாள், மற்றும் நேரம் : **13.11.2022 ஞாயிற்று கிழமை, 10.00a.m.-01.00 p.m.**

உடனடித் தேர்வு நடைபெறும் இடம் : **பட்டமளிப்பு விழா அரங்கம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-620 024.**

உடனடித் தேர்வுக்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான இணையதளம் (exams1.bdu.ac.in) **05.11.2022** அன்று திறக்கப்பட்டு **09.11.2022** அன்று மூடப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உடனடித்தேர்வு எழுதும் மாணவர்களின் பட்டியலை பாடவாரியாக மாணவர்களின் பெயர். பாடக்குறியீட்டுடன் தேர்வுக்கட்டணத்தை இணையவழியாக (Online Payment) செலுத்தியதற்கான இரசீது ஆகியவற்றை சேர்த்து அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கல்லூரி முதல்வர்கள். மாணவர்களுக்கான அனுமதி சீட்டை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

தேர்வு நெறியாளர் (பொ)

4/11/22

நகல் :